# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATION IN BACHELOR OF BUSINESS ADMINISTRATION (EXTERNAL) – 2009 / 2010 HELD IN DECEMBER – 2010

## BBA 36 – PROJECT MANAGEMENT

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. அ) "செயற்றிட்டம்" மற்றும் "செயற்பாடு" என்பனவற்றினால் பகிர்ந்தளிக்கப்படக்கூடிய அம்சங்களைச் சுட்டிக்காட்டிச் சுருக்கமாக விளக்குக.

(03 புள்ளிகள்)

ஆ) "விருத்திமுறை விளக்கம் என்பது செயற்றிட்ட எண்ணக்கரு முதல் செயற்றிட்ட திட்டம் வரையிலான சீர்செய்தலாகும்." வரைபடரீதியாக விளக்குக.

(07 புள்ளிகள்)

இ) "பெரும்பாலான செயற்றிட்டங்கள் ஒத்த பண்புகளைக் கொண்டுள்ளன." இக்கூற்றினை நீர் ஏற்பீரா அல்லது இல்லையா என்று விளக்குக.

(05 புள்ளிகள்)

ஈ) செயற்றிட்ட நுழைவாயில்களின் முக்கியத்துவம் பற்றிக் கூறுவதுடன் எவ்வகை செயற்றிட்டங்களில் அவைகள் காணப்படலாம் என்றும் கூறுக.

(05 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

02. அ) முக்கிய செயற்றிட்ட அக்கறையுடையோர்களைப் பட்டியல்படுத்தி விளக்குக.

(05 புள்ளிகள்)

ஆ) "ஒரு நிறுவனத்தின் நிறுவனக் கலாச்சாரம், செயற்றிட்ட வெற்றியில் நேரடித் தாக்கத்தைக் கொண்டிருக்கும்." இக்கூற்றினைச் சாதகமாக விபரிக்குக.

(05 புள்ளிகள்)

இ) "வினைத்திறனான செயற்றிட்ட முகாமையாளர் பொது முகாமைத்துவ திறன்களில் அனுபவத்தையும் அல்லது வழிகாட்டலையும் கொண்டிருப்பர்." அப்படிப்பட்ட பொது முகாமைத்துவத் திறன்களைச் சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

ஈ) "PEST" சூழல் காரணிகள் செயற்றிட்ட நிறுவனத்திற்கு வழிகோலும். PEST என்பதன் பிரிவினை எழுதி, எவ்வாறு அவைகள் செயற்றிட்ட நிறுத்தத்திற்கு வழிகோலும் என்றும் கூறுக.

(05 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

03. அ) "I → P → E → C → C மாதிரியானது ஒரு செயற்றிட்ட முகாமைத்துவ வாழ்க்கைவட்டக் கட்டுப்பாடு மற்றும் அமுல்படுத்தல் போன்றனவற்றிற்குப் பங்களிக்கும் நடவடிக்கைகளின் சேர்மானமாகும்" இக்கூற்றை ஏற்பீரா? அல்லது இல்லயா? என விளக்குக.

(05 புள்ளிகள்)

ஆ) செயற்றிட்ட ஒருங்கிணைப்பு முகாமைத்துவம் செயற்றிட்ட அபிவிருத்தி நிறைவேற்றம் மற்றும் பெற்று ஒருங்கிணைந்த மாற்றல் கட்டுப்பாடு போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது. செயற்றிட்ட ஒருங்கிணைப்பு முகாமைத்துவ எண்ணக் கருக்களுக்கிடையிலான தொடர்பினை ஆய்வு செய்க.

(05 புள்ளிகள்)

இ) கீழ்வருவனவற்றை உள்ளடக்கி ஒரு ஞாபகக் குறிப்பு ஒன்றினைச் செயற்றிட்ட உருவாக்கச் செய்முறை தொடர்பில் உமது சிரேஷ்ட செயற்றிட்ட முகாமையாளருக்கு எழுதுக.

* செயற்றிட்டத்தை அடையாளங்காணல்

(01 புள்ளி)

* செயற்றிட்டத்தின் சாத்தியக் கற்கைகள்

(01 புள்ளி)

* செயற்றிட்டச் சாத்தியக் கற்கைகளுக்கான சோதனைப் பட்டியல்

(06 புள்ளிகள்)

* செயற்றிட்ட மதிப்பீடும் அதன் அறிக்கைகளும்.

(02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

04. அ) கீழ்வருவனவற்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

* பொறுப்பு ஒப்படைத்தல் தாயம்
* தரமும் தங்கத்தட்டிடலும்
* செயற்றிட்ட கொள்வனவுத்திட்டமிடல்
* தொழில்சார் அறவியல் கோவை

(05 புள்ளிகள்)

ஆ) கீழ்வருவன பாவா நிறுவனத்தின் செயற்றிட்ட ஆபத்து தாக்கத்தரவு

| ஆபத்துக் காரணி | நிகழ்தகவு % | தாக்கம் % | | | |
|---|---|---|---|---|---|
| A | 90 | 10 | 20 | 40 | 80 |
| S | 70 | ” | ” | ” | ” |
| D | 50 | ” | ” | ” | ” |
| F | 30 | ” | ” | ” | ” |

மேலுள்ள அட்டவணையைப் பாவித்து கீழ்வருவனவற்றை செய்யும்படி நீர் வேண்டப்படுகின்றீர்.

- ஆபத்துத் தாக்கத் தாயத்தைத் தயாரிக்குக. (02 புள்ளிகள்)
- வேறுபட்ட ஆபத்து வகுதிகளை அடையாளங் காண்க. (01 புள்ளி)
- அவற்றிற்கான பதிலளிப்பு முறைகள் (02 புள்ளிகள்)

இ)

| Week | Days | Samples in inches | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | Sunday | 6 | 7 | 8 | 10 | 9 |
| | Monday | 8 | 10 | 9 | 10 | 8 |
| | Tuesday | 8 | 4 | 3 | 2 | 10 |
| | Wednesday | 10 | 10 | 12 | 4 | 5 |
| | Thursday | 16 | 18 | 10 | 12 | 10 |
| | Friday | 6 | 7 | 8 | 10 | 12 |
| | Saturday | 16 | 10 | 12 | 4 | 2 |
| 2 | Sunday | 6 | 8 | 8 | 10 | 16 |
| | Monday | 7 | 10 | 4 | 10 | 18 |
| | Tuesday | 8 | 9 | 3 | 12 | 10 |
| | Wednesday | 9 | 8 | 10 | 5 | 10 |
| | Thursday | 10 | 10 | 2 | 4 | 12 |
| | Friday | 9 | 8 | 10 | 5 | 10 |
| | Saturday | 6 | 7 | 8 | 10 | 12 |
| 3 | Sunday | 26 | 28 | 30 | 32 | 34 |
| | Monday | 34 | 36 | 38 | 40 | 42 |
| | Tuesday | 26 | 34 | 28 | 36 | 30 |
| | Wednesday | 24 | 34 | 36 | 28 | 36 |
| | Thursday | 28 | 36 | 34 | 34 | 30 |
| | Friday | 32 | 30 | 40 | 36 | 28 |
| | Saturday | 34 | 42 | 30 | 36 | 30 |

மேலுள்ள வாரம் 1 மற்றும் 2 இற்கான தரவுகளைப் பாவித்து :

i) இழி மற்றும் உயர் கட்டுப்பாட்டு மட்டங்களை காண்க.

(04 புள்ளிகள்)

ii) கட்டுப்பாட்டு வரைபினை வரைக.

(02 புள்ளிகள்)

மேலுள்ள 3 ஆம் வாரத் தரவுகளைப் பாவித்து :

i) இழிமற்றும் உயர்கட்டுப்பாட்டு மட்டங்களைக் காண்க.

(03 புள்ளிகள்)

ii) கட்டுப்பாட்டு வரைபை வரைக.

(01 புள்ளி)

(மொத்தம் 20 புள்ளிகள்)

05. அ) தொழில் வகுதிக் கட்டமைப்பு அகராதியின் உள்ளீடுகளை விளக்குக.

(05 புள்ளிகள்)

ஆ) எவ்வழிகளில், ஒரு செயற்றிட்ட முகாமையாளர் தனது அதிகாரத்தை செயற்றிட்ட அணிமீது பிரயோகிப்பார் என கூறுக.

(05 புள்ளிகள்)

இ) செயற்றிட்டத் தொடர்பாடல் தாயம் எவ்வாறு ஒரு செயற்றிட்ட முகாமையாளருக்கு உதவும் எனக் கூறுக.

(05 புள்ளிகள்)

ஈ) நீர் ஒரு செயற்றிட்ட முகாமைத்துவ வளவாளராக ஒரு மகாநாட்டிற்கு அழைக்கப்பட்டுள்ளீர். எவ்வாறான செயற்றிட்ட முகாமைத்துவ அறிவுகளை நீர் மாநாட்டில் சமர்ப்பிப்பீர் என்று சுருக்கமாகக் கூறுக.

(05 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*****